# மானுட உரிமைக்காவலர் "பெரியார்"

**மு.திருமகள்**

முனைவர் பட்ட ஆய்வாளர், (பதிவு எண்:1165/Ph.D.K8/Tamil/Part - Time/July 2016/Confirmation Dt: 01.02.2019), தமிழ்த்துறை, மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), தஞ்சாவூர் - 5, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் ப.இராசமாணிக்கம்**

இணைப்பேராசிரியர் - ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை, மன்னர் சரபோசி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), தஞ்சாவூர் - 5, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்:**

தமிழ்கூறு நல்லுலகில், பெருமையுடனும் புகழுடனும் வாழ்ந்து புகழை மட்டும் இம்மண்ணுலகில் நிறுத்திவிட்டு விண்ணுலகுப் புகுந்தவர் தந்தை பெரியார் அவர்கள். தமது கருத்தக்களை மூடிமறைக்காமல் வெளிப்படையாய் துணிவுடன் எடுத்துக் கூறுபவர். பெரியார் மிகவும் கண்டிப்பானவர் மட்டுமின்றி உழைப்பையும், பகுத்தறிவையும் தமது உயிர் மூச்சாகக் கொண்டவர். மதுவிலக்கு, தீண்டாமை, நாட்டுப்பற்று, கல்வி, சமயம், எழுத்தச் சீர்திருத்தம், மூடநம்பிக்கை, சினிமா, தொண்டு ஆகியவற்றை முதன்மையாகக் கொண்டு எங்கு பேசினாலும், கட்டுரை எழுதினாலும் அதில் சாமான்ய மக்களின் சுயமரியாதையும், அவர்களிது உரிமைகளுக்கான குரலாகவுமே பெரியார் அமைந்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய உள்ளது. 20-ஆம் நூற்றாண்டில் தமிழ்ச்சமுதாயத்தைத் தட்டியெழுப்பிய தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், மனிதன் பகுத்தறிவு பெறுவதற்கு அவர் சந்தித்த இன்னல்களையும், இடையூறுகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. மனிதன் என்ற தோட்டத்தில் பகுத்தறிவு, சுயமரியாதை என்ற செடியை நடுவதற்கு விதை தூவியாக அமைந்து துளிர்விடச் செய்தவர் பெரியார் ஆவார். அவரைத் தொடர்ந்து அண்ணா போன்ற தலைசிறந்த தொண்டர்கள் தந்தை பெரியாருக்குக் கிடைத்த பலன் தான். மனித வாழ்க்கைக்கு, முன்னேற்றத்திற்கு தடை என்று தோன்றிய எல்லாவற்றையும் தகர்த்தெறிந்த பெரியாரின் திறத்தை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

**கருவிச்சொற்கள்:**

விதைத்தல், பகுத்தறிவு, பெரியார், சிந்தனை, உரிமைக்குரல், மக்கள் மனதில், கொள்கை, சுயமரியாதை, ஓய்வறியாதவர், மனிதன், சீர்திருத்தம்

**முன்னுரை:**

இவ்வுலகில் பல்வேறு வகையான சிந்தனை விதைகளை விதைத்தவர் தான் தந்தை பெரியார் அவர்கள். அவருடைய குணம், கருத்துக்களை விதைத்துவிட்டு செல்லுமே தவிர, அது முளை விட்டதா? வளர்ந்து வருகிறதா? என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் மானிடனின் பகுத்தறிவு உரிமைக்காக குரல் கொடுப்பதாகும். ஏனெனில் விதைப்பது தான் அவருடை நோக்கமாகும். அது விளைந்து பலன் தருகிறதா என்று பார்த்து, அந்தப் பலனை அனுபவிப்பதற்காக் காத்திருப்பது அவருடைய நோக்கமல்ல. தற்போது அவர் விதைத்த விதைகள் முளையிட்டு, செடியாகி வளர்ந்து மரமாகி சிலவற்றில் பலன் தந்து கொண்டிருக்கிறது எனில் அவர் விதைத்த விதையின் தன்மை தரமானதாகும். தந்தை பெரியார் இவ்விதைகளை விதைப்பதற்குச் சந்தித்த எதிர்ப்புகள், நெருக்கடிகள், ஏளனங்கள் ஆகியவற்றை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

**ஓய்வறியாத போர் வீரர்:**

**“உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து யெல்லாம் உளன்” 1**

என்ற வள்ளுவரின் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்பவர் தந்தை பெரியார். மனித அறிவின் ஆற்றல் எல்லையற்றது. நாள்தோறும் புதுப்புது எண்ணங்களைத் தரவல்லது. அத்தகைய அறிவைத் தங்கு தடையின்றிப் பயன்படுத்திச் சிந்தித்தல் வேண்டும். அவ்வாறு சிந்தித்துக் கண்ட முடிவைத் துணிந்து செயற்படுத்தியவர் தான் பெரியார். சுயமரியாதைக் கொள்கையை தம் வாழ்நாள் முழுவதும் பேசியும், எழுதியும், கிளர்ச்சிகளின் மூலம் பரப்பி அறிஞர்கள் பலரால் வெறுக்கப்பட்டு, வெற்றிகள் பலவற்றைப் பெரியார் அவர்கள் குவிக்க முடிந்ததற்கு காரணம் அவருடைய ஓய்வறியா முழக்கமே ஆகும். சுயமரியாதைக் கொள்கையை பரப்ப அவர் கண்ட ஏளனப் பேச்சுகள் ஏராளம். அதற்கும் அவர், சமுதாயப் பொதுநலத் தொண்டு ஆற்ற முன்வரும் எவரும் மானம் கருதக்கூடாது என உலகுக்கு அறிவித்துத் தாமே அதற்குச் சான்றாக விளங்கினர். தாம் மேற்கொண்டிருப்பது நன்றிக் கடன் பாராட்டாத பணி என்பதை அனுதினமும் எண்ணிச் செயல்பட்டார்.

**“அறம் என்றால் தடிப்பசங்களுக்குச் சாப்பாடு போடுவதோ, கோயில் கட்டுவதோ அல்ல. மக்களுக்குத் தம்மாலான நல்லனவற்றைச் செய்வதேயாகும்” 2**

மேடைச் சொற்பொழிவுகளில், உரையாடலில் அல்லது விவாதத்தில் அவர் முன்னால் வைக்கப்பட்ட வினாக்களுக்குச் சிறிதும் தயக்கமின்றி அனைத்துக்கும் பதிலுரைத்து ஐயம் போக்குவதில் அவருக்கு நிகர் அவராகவே விளங்கினார். தாமே பதவிகளைப்பெற முடியும்

என்ற நிலை இருந்தபோதும், அதிகாரபூர்வமாகத் தமது பேரில் பதவி திணிக்கப்பட்ட போதும் பதவிகளைத் துச்சமென எண்ணிச் செயல்பட்டார். கொள்கைகள் பற்றிய விவாதத்தை எவரிடத்தில் மேற்கொண்டாலும், தமத நிலையைப் பற்றிய எண்ணத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, மனந்திறந்து விவாதித்து, தனதறிவுக்குச் சரியென்ற முடிவைத் தயங்காது ஏற்றுக்கொள்ளும் சான்றோராகவும் விளங்கினார். மருத்துவமனையில் ஓய்வெடுத்த காலத்திலும் உரையாடல், தத்துவம், கட்டுரை எழுதுவது என அயராது உழைத்தவர் பெரியார். இந்நிலையிலும் அதிகார வர்க்கம் நிறைந்த பலபேரின் தொடர் இன்னல்களுக்கும் ஆளான போதிலும்,

**“பொறாமைக்காரர்கள் பொதுநலத் தொண்டனைப் பற்றி இழிவாகப் பேசிஅவனை அவமானப்படுத்திக் கொண்டுதான் இருப்பார்கள்” 3**

என்று சொல்லி தன்னைச் சார்ந்தோருக்க ஆறுதல் அளித்தார். அவருடைய சுயமரியாதைக் கொள்கைகளுள் ஒன்றான சோதிட மூட நம்பிக்கை ஒழிப்புக்கு அவரே பெருஞ்சான்றாக விளங்கினார். அவர் ஜாதகத்தில் அவருடைய ஆயுள் 60 வயதாக இருந்ததாகவும், அதையும் தாண்டி நான் வாழ்கிறேன் என்று பல மேடைப்பேச்சுகளில் அவரே கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது. அது உண்மையுமன்று. கல்வியறிவு அற்ற மக்கள் நிரம்பிய நாட்டில் கசப்பான கொள்கைகளைப் பரப்ப முனைந்த அவர், பாமரர் மொழியில் கௌதமப்புத்தரைப் போல், தம் கருத்துக்களை எடுத்துச் சொல்லிப் பரப்பினார். தர்க்கRதியாகத் தமது கொள்கைகளைப் பரப்புவதில் நிகரற்றவராக செயல்பட்டு மாற்றுக் கருத்தினரையும் ஈர்க்கும் தன்மையில் சிந்திக்க வைத்தவர் பெரியார். அவரது பேச்சு நிகழ்த்தப்படாத பெருநகரம் அமெரிக்காவில் இல்லை என்று கூறும் அளவிற்கு, அவரது இறுதிக் காலமான 1899 வரையில் 39 ஆண்டுகள் பிரசாரப் பணியாற்றினார். அவருடைய பிரச்சாரத்தைக் கேட்கப் படித்த இளைஞர் முதல் படிக்காத பாமரப் பெண்கள் வரை பேரார்வத்துடன் வருகைப் புரிவார்கள் என்றும், ஒரு சொற்பொழிவுக்கு அக்காலத்தில் குறைந்தபட்சம் 300 டாலர் அளித்து அவரை அழைப்பார்கள் என்றும் பலர் கூறுவதுண்டு. அத்தகைய மேதையின் உழைப்பால் விளைந்த பெரும்பயன், படித்தவர்கள், பெரிய மனிதர்கள், எனப்படுவோர் இன்று நாத்திகர்களாகத் திகழ்கின்றனர். பெரியாரின் ஆணித்தரமான நாத்திகக் கருத்துகள் உலகின் பல பகுதிகளிலும் படித்தவர்கள் மத்தியில் பரவி நிற்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இதனை,

**“எங்கெங்கு அறிவுக்கு மரியாதை இல்லையோ, சமத்துவத்திற்கு இடமில்லையோ அங்கெல்லாமிருந்து நாத்திகம் முளைக்கிறது” 4**

என்று பெரியார் அன்றே தமது கருத்து மூலம் தெரிவித்தார். உலகிலுள்ள கொடுமைகள் எல்லாவற்றையும் விட, மக்களை மக்கள் தீண்டாமை என்கின்ற இழிவு சம்பந்தமாகச் செய்துவரும் கொடுமையே மிகப்பெரிய கொடுமை என்றும், அதற்குச் சமமாக வேறு எந்தக் கொடுமையும் கூறமுடியாதென்றும் பெரியார் அடிக்கடி கூறுவார். இது மக்களாலும், அரசியல், சமூக இயல்வாதிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாகும். தீண்டாமையை ஒழித்து, அதனால் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் மக்களைக் கைதூக்கி விடவேண்டியது நியாயம் தான் என்று பெரியார் தமது கொள்கை மூலம் மக்கள் மனதில் விதையாய் விதைத்தார். தீண்டாமை என்பது, ஏணி மரப்படிபோல், எங்கோ ஓர் மூலையில் இன்னும் சில தலைமுறையினை பிடித்திருக்கின்றது. அதனை தகர்த்தெறிய பெரியார் வழி சீடர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். பெரியார் விதைத்த விதையே இன்று கர்ப்பவிருட்ச மரமாக மக்கள் மனதில் வளர்ந்து தீண்டாமையை ஒழித்து வருகிறது.

**<u>இந்தி எதிர்ப்பு:</u>**

1926-ஆம் ஆண்டு முதல் தந்தை பெரியார் தமிழ்நாட்டில் இந்தி நுழைக்கப்பெறுவதை எதிர்த்து வந்தார். உலக வாழக்கையில் ஓர் ஒடிந்து போன குண்டூசிக்கும் பயன்படாத மொழி தான் இந்தி என்றும், இந்தியைப் பொதுமொழியாக்குவதால் நாட்டிற்கு நன்மை இல்லை. அதனால் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்குத் தடை உண்டாகும். தமிழ் மொழியின் வளர்ச்சியும் குன்றும் என்றும், தமது பிரச்சாரத்தில் முழக்கமிட்டார். தமிழ் மொழியின் பழமையையும் தமிழ் மக்களின் நாகரிகத்தையும் பழந்தமிழ் நூல்களின் வழி நாம் அறியலாம். தமிழர்கள் யவனதேசம், உரோமபுரி போன்ற கடல் தாண்டி உள்ள பல தேசங்களோடு வியாபாரம் செய்திருந்ததையும், அவ்வியாபாரத்திற்கு ஏற்ற தொழில்கள் நமது நாட்டில் அன்று நிறைந்திருந்ததையும் நாம் அறிவோம். ஆனால் இன்று பலர் அயல்நாட்டு மொழியின் மீது கொண்ட மோகத்தாலும், வெளிநாட்டு வேலையின் மீது காட்டும் ஆர்வத்தாலும் நம் நாட்டு வளம் குன்றத் தொடங்கியது. இதனை நம் மக்களுக்கு உணர்த்த அன்றே பெரியார்,

**"வங்காளிக்கு வங்க மொழிக்கப் பற்றுண்டு. மராட்டியனுக்கு மராட்டிய மொழியில் பற்றுண்டு. ஆந்திரனுக்கு ஆந்திரமொழியில் பற்றுண்டு. ஆனால் தமிழனுக்கு தமிழில் பற்றில்லை. இது பொய்யோ? தமிழ்நாட்டில் தமிழ் புலமை மிகுந்த தமிழர்கள் எத்தனை பேர்? ஆங்கிலப்புலமையுடைய தமிழர்கள் எத்தனை பேர்? என்ற கணக்கெடுத்தால் உண்மை விளங்கும். தாய்மொழியில் பற்றுச்செலுத்தாதிருக்கும் வரை தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்" 5**

என்று மக்கள் மனதில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியவர் தந்தை பெரியார். அவரை பொருத்தமட்டில் இந்தி என்பது வெளிமாநிலங்களில் பார்ப்பன மதப்பிரச்சாரம் செய்யக் கற்பித்துத்தரும் ஒரு வித்தையாகவே கருதினார். இந்த இரகசியத்தை நமது நாட்டுப் பாமரமக்கள் அறிவதற்கு தமது வாத திறமையைப் பயன்படுத்தினார். இரண்டொருவர் இதனை புரிய ஆயத்தமாகும் பொழுது அவர்களைத் தேசத்துரோகி என்று சொல்லி பெரியாருக்கு கண்டனம் தெரிவித்தனர். அதனையும் பொருட்படுத்தாமல் பாமர மக்கள் மனதில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாய் பல்வேறு வகையில் விதைகளை தூவ ஆரம்பித்தார். சமஸ்கிருதத்தினால் தமிழர்களும் தமிழ்நாடும் வருங்காலத்தில் என்ன நிலைக்கு தாழ்ந்து போகும் என்று பெரியார் அன்றே கூக்குரலிட்டார். பார்ப்பனர்கள் செத்த பாம்பான சமஸ்கிருதத்தை எடுத்துவைத்துக் கொண்டு செய்த ஆர்ப்பாட்டத்தை முறியடித்தவர் தந்தை ஈ.வெ.ரா அவர்கள். அதன் விளைவு இன்று "அன்னைத் தமிழில் அர்ச்சனை" என்ற பலகை அனைத்து கோவில்களிலும் காணலாகின்றது. இந்தி எதிர்ப்பு நடைபெற்ற அக்காலத்திலேயே தந்தையொடு நெருங்கி உறவாடிய கவிஞர் நாச்சியப்பன், அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நிரல்படத் தொகுத்து கவிதைகளாக வார்த்து நமக்குத் தந்துள்ளார்.

**"தீதுவரும் இந்தியினால்! முன்னேற்றம்**
**தடையாகும்! தீந்த மிழ்க்கும்**
**ஆதரவு கிடைக்காமல் அழிவுவரும்!**
**இந்திஉயர் வாகும்" 6**

இதன் விளைவு பெரியாரைச் சிறையில் வைத்தால் தமிழர் கிளர்ச்சி அடங்கிவிடும் என்று அரசு நினைத்தது. மாறாக அது வலுத்தது. தடுப்பூசி போட்ட பலன் போலாயிற்று. பெரியாரின் வீரகர்ஜனை தமிழர் காதுகளில் ஒலித்தது. பெரியார் தெளித்த விதைகள் முளைத்து எங்கும் செழித்து வளர்ந்தன. **"தமிழ்நாடு தமிழருக்கே"** என்ற அவர் தந்த மந்திரத்தின் வல்லோசை வானையும் பிளந்தது.

**"நாமிருக்கும் நாடுநம தென்றறிந்தோம் - இது**
**நமக்கே உரிமையாம் என்பதுணர்ந்தோம்" 7**

என்ற பாரதியின் கவிதை அடிகள் மக்கள் மனதில் குதித்துக் கூத்தாடின. பெரியார் சிறைப்பட்ட சிலநாட்களுக்குப் பின்னர் 1938 டிசம்பர் 18-ல் அவர்தம் மணிவிழா நாடெங்கும் நடைபெற்றது. அவர்பெயரால் அன்னதானங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள், அவர் கொள்கைக்கு மாறாக அவர் படத்துக்கு தூப, தீப ஆராதனைகள் நடைபெற்றன. இன்று தமிழ் நாடெங்கும் மூலைமுடுக்குகளிலும் அவர் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அவர் தியாகத்தை மக்கள் உணர்ந்தனர். தமிழைவிட

இந்தி எந்தவிதத்திலும் மேலான மொழியல்ல என்பதை இன்றைய சமூகமும், அரசும் உணர்ந்தமை பெரியாரின் உரிமைக்குரலுக்குக் கிடைத்த நன்மதிப்பாகும்.

**எழுத்துச் சீர்திருத்தம்:**

இன்றைய தமிழ் வரிவடிவத்தில் செய்யப்பெற்ற மாற்றங்கள் பலவற்றைப் பற்றிய கருத்து வேறுபாட்டை எடுத்துச்சொல்ல அன்று எவரும் துணிவாய் முன்வராமல் இருந்தனர். ஆனால் தந்தை பெரியார் அரைநூற்றாண்டிற்கு முன்னதாகவே துணிவாகவே சில வரிவடிவங்களில் மாற்றம் செய்து விடுதலை, குடியரசு, போன்ற இதழ்களில் செயற்படுத்தினார். மனிதன் விஞ்ஞானத்தில் நாகரிகத்தில், நடப்பில் தலைகீழாக மாற்றம் பெற்றபின் அதற்கேற்ப மொழியை மாற்றிக் கொள்ளாமல் இருப்பது மடமை என்றுணர்ந்தார் பெரியார். எளிதாகக் கற்றுக்கொள்வதற்கு எழுத்துக்கள் எளிதில்எழுதக்கூடியனவாகவும், எண்ணிக்கையில் குறைவாகவும், இருக்க வேண்டியது இன்றியமையாததாகும் என்று பெரியார் எழுத்துச் சீர்திருத்தத்தையும் செய்ய ஆரம்பித்தார். எல்லா உயிர்மெய் எழுத்துக்களுக்கும் ஆ-காரம், ஏ-காரம் ஆகிய ஒலிகளக்கு ா(கால்), n (இரட்டைக் கொம்பு) ஆகிய குறிப்புகளைச் சேர்த்து எப்படி கா, கே என்றாக்கி கொண்டுள்ளோமோ அதுபோலவே கி, கீ, க, கூ முதலிய ஒலிகளுக்கும் ஒரு தனிப்பட்ட குறிப்பு அடையாளத்தை என் சேர்த்துக் கொள்ளக்கூடாது என்று சிந்தித்து புதிய வரிவடிவத்தைக் கொடுத்தவர் பெரியார் அவர்கள். ஔ-காரத்துக்கும் கௌ என்பதற்குப் பதிலாக கவ் என்றோ கவு என்றோ எழுதினால் ஒலிமாறுவதில்லை. கௌமதி-கவ்மதி, கவுமதி என்பவற்றின் ஒலிகள் ஒன்றுபோலவே உச்சரிப்பதைக் காணலாம்.

**“தமிழ்மொழிக்கு ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்திக் கொள்ள முன் வருவோமானால், மொழிபற்றி, எழுத்துப்பற்றி, கற்பது பற்றிய சிரமங்களும் பிரச்சனைகளும் பறந்தோடிவிடும்” 8**

என்று பெரியார் செய்த சீர்திருத்தம் நமக்கு எளிய வரிவடிவமாக மாறியது. தமிழ் வஏவடிவம் தொல்காப்பியர் காலத்திலிருந்து நிலைத்து நிற்கும் ஒன்றன்று. வள்ளுவரும், இளங்கோவும் எழுதிய வரிவடிவத்தில் உள்ள எழுத்துக்கள் நமக்குப் புரியாது. இன்று நாம் எழுதும் வரிவடிவத்திலும் அவர்கட்கு ஓர் எழுத்தும் புரியாது. அவ்வளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதில் முக்கிய பங்கு பெரியாரைச் சாரும்

**மதுவிலக்கு:**

பெரியாரின் சிந்தனைகளில் பொதுவான சிந்தனை மதுவிலக்காகும். சாமான்யன் மத்தியிலிருந்து பெரியார் உரிமைக்குரல் எழுப்பினார். மதுபானத்தால் பொருளாதாரக்

கேடு ஏற்படுவதும், அறிவுக்கேடு ஏற்படுவதும் செயற்கையேயொழிய இயற்கையால் அல்ல. பொதுவாக மது அருந்துவதையே குற்றம் என்று சொல்லிவிடமுடியாது. கெடுதலை உண்டாக்குவதும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் கேடு விளைவிப்பதுமான மதுபானமே இன்று விலக்கப்பட வேண்டியதாகும். அதைத்தான் நாம் “மதுவிலக்கு” என்பதே தவிர, மதுவை அடியொடு யாரும் வெறுக்கவில்லை. இதனையே பெரியார்

**“ஓர் இடத்தில் கடைகளை மூடிவிட்டு மற்ற இடத்திற்கு ஓடவிட்டு அவர்களை நாசமாக்குவதும், அத்தொழிலில் இருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கு வேறு தொழில் இல்லாமல் செய்வதும் ஒரு நாளும் கள்ளை நிறுத்திவிடாது. வெளிப்படையாய்ப் பிழைக்க வழி இல்லாதவர்கள் திருட்டுத்தனமாய்ப் பிழைத்துத் தீர வேண்டியது இயற்கை விதி” 9**

இவ்வாறு தனது மொழிநடையில் அன்றே குரல் எழுப்பினார். மதுவிலக்குத்திட்டம் என்பது மக்களை மயக்கும் அரசியல் சாதூரியமே தவிர, மக்கள் நலம் மட்டும் கருதியிருந்தால் அதற்கு “மதுவிலக்கு” என்ற பெயருக்குப் பதிலாக, “மதுக்கெடுதி ஒழிதல்” என்ற சொல்வதே சரியானதாகும். இதன் அர்த்தம் செயற்கையான மதுவை அரசு வியாபாரம் செய்யக்கூடாது என்பதாகும். மதுவிலக்கு என்பதே சக்கரவர்த்தி இராசகோபாலா சாரியார் மூளையின் அதிசயக் கண்டுபிடிப்பு என்று பெரியார் அடிக்கடி தனது மேடைப் பேச்சுகளில் கூறுவார்.

**<u>சோதிடம்:</u>**

சோதிடம் பற்றியும் தந்தையவர்கள் பல்வேறு சிந்தனைத் துளிகளை மக்கள் முன் வடித்துள்ளார். பொதுவாக ஒரு பகுத்தறிவுவாதி சோதிடத்தின் தன்மையை ஊடுருவிப் பார்த்தால் அதனை ஒரு மத சம்பந்தமான கொள்கை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் மத சம்பந்தமான கொள்கைகள் அநேகமாக மூடநம்பிக்கைகளை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கின்றன. அதுபோலவே சோதிடமும் மூடநம்பிக்கையாகவே உள்ளது. சோதிடம், சாதகம், கிரகங்களின் பெயர்கள் ஆகியவை வடமொழிச்சொல்லாகும். தமிழில் அதற்கேற்ற பழஞ்சொல்லே இல்லை. சோதிடக்கலை என்பது தமிழனுக்கு இல்லாத கலை என்றே பெரியார் கருதினார். சோதிடம் என்றாலே பெரியார்,

**“முட்டாள்தனமும், பித்தலாட்டமும் (அயோக்கியதனமும்) சரிபாதியாகக் கலந்ததே சோதிடம் என்பது” 10**

இவ்வாறு கூறுவதோடு, நாள், கிழமை, மாதம், ஆண்டு, நேரம், காலம், சோதிடம், சகுனம் முதலிய எத்தனையோ குருட்டு நம்பிக்கை மக்களைக் கவ்விக் கொண்டுள்ளன

என்பதையும் மக்கள் மனதில் பல வழிகளில் விதைக்க பெரியார் பெரிதும் முயற்சித்தார். அதற்கு அவர் கையில் எடுத்துக் கொண்ட விதைதான் "பகுத்தறிவுச் சிந்தனை" ஆகும்.

**முடிவுரை:**

இவ்உலகில் நூற்றுக்கணக்கான மலைகள் இருந்தாலும் நோக்கமுடியாத உயரம் இமயம்! அலைகள் ஆயிரம் எனினும் அளக்கமுடியாத ஆழம் கடல்! இஃது போல் 20-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய தலைவர்கள் எண்ணற்றோர் என்றாலும் மக்களின் மனதில் நிற்பவர்களோ மிகச்சிலரே. அச்சிலரில் முதன்மை இடம் வகிப்பவர் தந்தை பெரியார். அவர் தொடாத துறைகள் இல்லை. மனிதனை இழிவுபடுத்துவதற்கும், பகுத்தறிவற்ற தன்மைக்கும் காரணமாக அமைந்த பல நிகழ்வுகளுக்கு எதிராக உரிமைக்குரல் எழுப்பி மானுடனின் சுயமரியாதையைக் காப்பாற்ற வந்த மேதையே பெரியார் என்பது இக்கட்டுரை ஆய்ந்த முடிவாகும். மேலும் தமது கொள்கைகள் அனைத்திலும் உலக மானிடத்தை முன்வைத்தே வழங்கியுள்ளார் என்பதும், மனிதன் சுயமரியாதையுடனும், தன்மானத்துடனும் இருப்பதற்கு பல்வேறு எதிர்ப்புகளை கடந்து பல இன்னல்களைத் தாண்டியும் மக்கள் மனத்தில் நீங்கா இடம் பிடித்தவர் பெரியார் என்பதும், அதற்கு காரணம் அன்று அவர் தூவிய விதையும், அதற்கான உரமுமே என்பதும் இக்கட்டுரையில் கண்டறியப்பட்ட முடிவாகும். ஆகவே பெரியார் அவர்கள் "மானுட உரிமைக் காவலரே" ஆவார்.

**சான்றெண் குறிப்புகள்:**


1. குறள் 294
2. பக்.எண் 84 - தொ.ஆ சூர்யா - அறிஞர்களின் பொன்மொழிகள்
3. ப.எண் 85 - மேலது
4. ப.எண்.85 - தொ.ஆ சூர்யா - அறிஞர்களின் பொன்மொழிகள்
5. ப.எண் 137 - எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) - பெரியாரும் சமதர்மமும்
6. ப.எண் 145 - ஆர்.முத்துக்குமார் - பெரியார்
7. பாரதியார் கவிதைகள் - தேசியகீதங்கள் - சுதந்திரப்பள்ளு -5
8. ப.எண் 154 - ஆர்.முத்துக்குமார் - பெரியார்
9. ப.எண்@ 97, டாக்டர் ந.சுப்புரெட்டியார் - தந்தை பெரியார் சிந்தனைகள்
10. ப.எண் 101 - மேலது

**பார்வை நூல்கள்:**


- ஆர்.முத்துக்குமார் - பெரியார் - கிழக்கு பதிப்பகம்
- எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ) - தந்தை பெரியார் சிந்தனைக் களஞ்சியம் - சீதை பதிப்பகம்
- கலைஞர் மு.கருணாநதி - திருக்குறள் கலைஞர் உரை - திருமகள் நிலையம்
- சூர்யா (தொ.ஆ) - அறிஞர்களின் பொன்மொழிகள் - ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
- டாக்டர் ந.சுப்புரெட்டியார் - தந்தை பெரியார் சிந்தனைகள் (84) - யாழ் வெளியீடு
- பாரதியார் - பாரதியார் கவிதைகள் - திருமகள் நிலையம்
- மாஸ்கோ (தொ.ஆ) - தந்தை பெரியாரின் பொன்மொழிகள் - பானு பதிப்பகம்
- வே.ஆனைமுத்து (ப.ஆ) - பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள் - சிந்தனையாளர் கழகம்


❖❖❖❖❖